

அரசிடம் வைக்கும் வேண்டுகோள்!

காந்தி தபால் தலைகளை சேமிக்கும் ராஜேஷ்: பள்ளிக்கூடத்தில் ஆறாவது படிக்கும் போது ஆரம்பித்த தபால் தலை சேகரிக்கும் பழக்கம், இன்று வரை தொடர்கிறது.

குறிப்பாக, காந்தி மீது நான் கொண்ட ஆர்வத்தால் அத்தனை காந்தி தபால் தலைகளையும் சேகரித்து வைத்துள்ளேன்.

அரிய புகைப்படங்கள், புத்தகங்கள், அவரைப் பற்றிய பேப்பர் கட்டிங்ஸ், அவர் உருவம் பொறித்த டோக்கன்கள், காயின்கள் ரூபாய் நோட்டுகள், அவரின் கையெழுத்துகள் என்று இந்த கலெக்ஷனுக்காக மட்டும் ஐந்து லட்சம் ரூபாய் வரை செலவழித்துள்ளேன்.

நான் வசதியான வீட்டுப் பையனும் இல்லை. கும்மிடிப்பூண்டியில் இயங்கும் மத்திய அரசின் பெட்ரோலிய நிறுவனத்தின் கணக்குப் பிரிவு ஊழியராக இருக்கிறேன்.

இந்தியாவில் மட்டும் 42 வகையான காந்தி உருவம் பொறித்த தபால் தலைகள் வெளிவந்திருக்கின்றன. இது தவிர 120 நாடுகளில் காந்திக்காக ஸ்டாம்ப் வெளியிட்டு அவரை கவுரவப்படுத்தியுள்ளன. இது வேறு எந்தத் தலைவருக்கும் கிடைக்காத பெருமை.

இந்தியா வெளியிட்ட முதல் தபால் தலையை பன்னிரண்டாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறேன். அதே போல், பிரபல ஓவியர் பிகாசோ வரைந்த காந்தி ஓவியத்தை செயின்ட் தாமஸ் பரின்ஸ் ஐலேண்ட் என்ற ஒரு குட்டி நாடு வெளியிட்டிருக்கிறது.

அதை கடுமையாக முயற்சித்து போன வருடம் தான், கோல்கட்டா போய் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து வாங்கினேன்.

இத்தாலியிலும், இங்கிலாந்திலும் கூட தொலைபேசி கார்டுகளில் காந்தி படத்தை வெளியிட்டு கவுரவப்படுத்தி இருப்பது போல், இந்தியாவிலும் தொலை தொடர்புத் துறை வெளியிடும் கார்டுகளில், சினிமா நட்சத்திரங்களின் படங்களைத் தவிர்த்துவிட்டு காந்தி உருவத்தைப் பொறிக்க வேண்டும்; இதுவே நான் அரசிடம் வைக்கும் வேண்டுகோள்.

இன்று காந்தி ஜெயந்தி

பெரிதுபடுத்த வேண்டா

■ நமது டில்லி நிருபர் ■

• அயோத்தி தீர்ப்பு உடனடியாக அமலாகாது

• பரபரப்பாக்க வேண்டாம் என சிதம்பரம் அழைப்பு

'அலகாபாத் ஐகோர்ட்டின் லக்னோ கிளை பெஞ்ச், அயோத்தி விஷயத்தில் தனது தீர்ப்பைத் தான் வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பு உடனடியாக நடைமுறைப்படுத்தக்கூடியது அல்ல. மூன்று மாதங்களுக்கு தற்போதுள்ள நிலைமையே நீடிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளது.

இப்பிரச்னை, சுப்ரீம் கோர்ட்டுக்கு மேல்முறையீடு செய்யப்பட வாய்ப்புள்ளது. அங்கு அளிக்கப்படும் இடைக்கால தீர்ப்பை அமல்படுத்த, எல்லாவித மான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதுவரை தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைகள் எல்லாம் அயோத்தி விவகாரத்தை பெரிதுபடுத்தாமல் இருக்க வேண்டும்' என்று மத்திய அரசு கூறியுள்ளது.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய இடம் குறித்து நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்ட நிலையில், மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் நேற்று டில்லியில் நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

அயோத்தி விவகாரம் தொடர்பாக அலகாபாத் ஐகோர்ட்டின் லக்னோ கிளை பெஞ்ச் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. இந்த தீர்ப்பின் விவரங்களை, வழக்கில் சம்பந்தப்பட்டவர்கள் ஆராய்ந்து வருகின்றனர். இதில் பாதிக்கப்படுவதாக நினைக்கும் தரப்பினர், சுப்ரீம் கோர்ட்டிற்கு மேல்முறையீடு செய்யப் போகின்றனர் என்பது பரவலாக அனைவரும் அறிந்த ஒன்றே.

இப்போது அளிக்கப்பட்ட தீர்ப்பில், தற்போது உள்ள நிலைமைகளே அடுத்த மூன்று மாதங்களுக்கும் நீடிக்க வேண்டுமென்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர். இந்த மூன்று மாதங்களில் மேல்முறையீடு குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ள அதிக வாய்ப்புள்ளது.

ஆகவே, இப்போது அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு என்பது உடனடியாக நடைமுறைப்படுத்தக் கூடியது அல்ல. மூன்று மாத கால இடைவெளி உள்ளது.

இப்போது மத்திய அரசிற்கு உள்ள கடமை என்னவெனில், 1990களில் இந்த விவகாரம் தொடர்பாக சுப்ரீம் கோர்ட் அளித்த உத்தரவின்படி, தற்போது இருக்கும் இதே சூழ்நிலைகளே நீடிப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியது மட்டுமே.

பாதிக்கப்பட்ட தரப்பினர் சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்லும் போது, அங்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்படாதிக வாய்ப்பும் உள்ளது. அப்போது, சுப்ரீம் கோர்ட் என்ன இடைக்கால உத்தரவை அளிக்கிறதோ அதை மத்திய அரசு நடைமுறைப்படுத்தும்.

கண்ணியம் காத்தனர்: லக்னோ பெஞ்சின் தீர்ப்புக்கு பிறகு, கடந்த 24 மணி நேரத்தில் நாட்டு மக்கள் காட்டிய அமைதியும், ஒத்துழைப்பும் மிகவும் வரவேற்கத்தக்கது. மிகுந்த கண்ணியத்துடன் பொதுமக்கள் நடந்து கொண்டுள்ளனர். இதுவரை எந்தவொரு இடத்திலும் சிறியதொரு பிரச்னையும் வரவில்லை.

1992ம் ஆண்டு மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்தை நியாயப்படுத்துவது போலவும், அதில் ஈடுபட்டவர்களை காப்பாற்றுவது போலவும் இந்த தீர்ப்பு இருப்பதாகக் கூறுவதை ஏற்க முடியாது. தீர்ப்பின் எந்த இடத்திலும் நீதிபதிகள் அவ்வாறு கூறவில்லை. மசூதி இடிப்பு சம்பவத்தை லிபரான் கமிஷன் ஆராய்ந்தது. என்னைப் பொறுத்தவரை மசூதி இடிப்பு என்பது சட்ட விரோத நடவடிக்கை.

அயோத்தி விவகாரத்தை அதிக நேரம் காட்டுவதையும், இது பற்றிய விவாதங்களை நடத்திக் கொண்டிருப்பதையும் தொலைக்காட்சிகள் கைவிட வேண்டும்.

பத்திரிகைகளும் அயோத்தி விவகாரத்திற்கு நிறைய இடம் ஒதுக்கி செய்திகளை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும். அடுத்த மூன்று மாதங்களுக்கு மீடியாக்கள் இதை செய்தால், அது நாட்டுக்கு செய்யும் மிகப்பெரிய புண்ணியம்.

அயோத்தி விட்டு, பிற மு னம் செலுத்தி வெல்த் போட ரன. அந்த மே கள் வெளியிட் படுத்தினால் ந

சர்ச்சைக்கு ஒழுங்கையும் காக்க வேண் முதல்வர் மா திய அரசு அ யால் தான், நிலைநாட்டி எப்படியோ, கப்பட்டால்

ராமருக்கு கட்ட வேண் ஆனால், அ தீர்ப்பு வரும் ஏற்கனவே 5 படை உ.பி.,

தவிர, இ தயார் நிலை அசம்பாவித றாலும் கூட, அந்த இட வகையில் உள்ளன.

இவ்வாறு

சகஜ நிலையில் அயோத்தி: அயோத்தியில் பள்ளிகள், கடைகள் திறக்கப்பட்டு நேற்று சகஜநிலை திரும்பியது. அங்குள்ள கோவில் ஒன்றில் குரங்குகளுக்கு ஒரு பக்தர் உணவளிக்கிறார்.

வரும் 9ம் தேதி ஆய்வுக்கு முஸ்லிம் தனிச்சட்ட வாரி

லக்னோ, அக். 2-

அயோத்தி சர்ச்சை நிலம் தொடர்பாக, அலகாபாத் ஐகோர்ட்டின் லக்னோ பெஞ்ச் வழங்கிய தீர்ப்பை அகில இந்திய முஸ்லிம் தனிச்சட்ட வாரியம் வரும் 9ம் தேதி ஆய்வு செய்கிறது.

இது தொடர்பாக, அகில இந்திய முஸ்லிம் தனிச் சட்ட வாரியத்தின் உறுப்பினர் மவுலானா கலீத் ரஷீத் கூறியதாவது:

அலகாபாத் ஐகோர்ட்டின் லக்னோ பெஞ்ச் வழங்கிய தீர்ப்பு குறித்து அகில இந்திய முஸ்லிம் தனிச்சட்ட வாரியத்தின் சட்டக் குழு வரும் 9ம் தேதி டில்லியில் கூடி ஆய்வு செய்கிறது. அப்போது, 10 பேர் அடங்கிய குழு, தீர்ப்பு பற்றி விரிவாக விவாதிக்கும்.

அதைத் தொடர்ந்து, தனிச்சட்ட வாரியத்தின் 51 உறுப்பினர்கள் கொண்ட நிர் வாகக் குழு, வரும் 16ம் தேதி கூடி விவாதிக்கிறது. அப்போது, சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்வது தொடர்பான செயல்திட்டங் கள் குறித்து முடிவு செய்யப் படும்.

அலகாபாத் ஐகோர்ட் தீர்ப்பை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்ய வேண்டும் என, தனிச்சட்ட வாரியத்தின் உறுப்பினர்கள் பலர் விரும்புகின்றனர். இருந்தாலும், இதுதொடர்பாக நிர்வாகக் குழு கூட்டத்தில் தான் இறுதி முடிவு எடுக்கப்படும்.

இவ்வாறு கலீத் ரஷீத் கூறினார்.

இதற்கிடையில், டில்லி ஜும்மா மசூதியின் ஷாகி இமாம் சையது அகமது புகாரி தீர்ப்பு பற்றி கூறுகையில், ''சர்ச்சைக்குரிய நிலம் தொடர்பாக அலகாபாத் ஐகோர்ட் வழங்கிய தீர்ப்பு அதிருப்தி அளிப்பதாக உள்ளது.

இருந்தாலும், முஸ்லிம் கள் அமைதி காக்க வேண் டும். முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பிரச்னை தொடர்பான முடிவை, மூடப்பட்ட ஒரு அறையில் எடுக்க முடியாது. அப்படி

முதிர்ச்சி, நாகரிகத்துடன் அமைதி காத்த

அயோத்தி வழக்கு தீர்ப்பால் சலசலப்பு இல்லை

புதுடில்லி, அக். 2-

அயோத்தி வழக்கு தீர்ப்புக்காக நாடே மிகுந்த பரபரப்புடன் எதிர்பார்த்திருந்தது. தீர்ப்புக்கு பின் என்ன நடக்குமோ என்ற அச்சமும் இருந்தது. இதற்கெல்லாம் நேர்மாறாக, யாருமே எதிர்பார்க்காத வகையில் ஒட்டு மொத்த தேசமுமே அமைதியாக காட்சியளித்தது.

இந்த தீர்ப்பால் யாருக்கும் வெற்றியும் இல்லை; தோல்வியும் இல்லை என்ற மனப்பான்மையுடன் அனைவருமே தீர்ப்பை வரவேற்று, சகஜமான நிலைக்கு திரும்பினர்.

நாட்டின் அனைத்து பகுதிகளில் மக்கள் வழக்கம்போல அன்றாட பணிகளில் ஈடுபட்டனர். எந்த இடத்தில் இருந்தும் அசம்பாவிதமோ, விரும்பத்தகாத சம்பவமோ நடைபெற்றதாக தகவல் இல்லை.

தீர்ப்புக்கு பின் எந்த சூழ்நிலையையும் சமாளிக்கும் வகையில் நாடு முழுவதும் பல இடங்களில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. குறிப்பாக பிரச்னைக்குரிய இடங்களில் எல்லாம் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு இருந்தது. மேலும் சமூக விரோதிகள் அதிகம் உள்ள பகுதிகளில் எல்லாம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்தன.

பலத்த பாதுகாப்பு ஒரு பக்கம் இருந்தாலும், தீர்ப்புக்காக கொண்டாட்டங்களோ, கேளிக்கைகளோ நடந்ததாக நாட்டின் எந்த பகுதியிலும் தகவல் இல்லை.

அந்தளவுக்கு முதிர்ச்சியோடு, நாகரிகமாக நடந்து கொண்டு, பேரதிர்ச்சியை மக்கள் ஏற்படுத்தியுள்ளனர்.

குறிப்பாக இது நாள் வரை பதட்டமான சூழ்நிலையில் வாழ்ந்து வந்த, அயோத்தி, பைசாபாத் மக்கள் எப்போதும் இல்லாத வகையில் சகஜமான நிலைக்கு திரும்பினர்.

இந்த நகரங்களில் வாகனங்கள் செல்வதற்கு இன்னும் அனுமதிக்கப்படவில்லை. பாதுகாப்பும், கண்காணிப்பும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. இன்னும் சில நாட்களுக்கு பாதுகாப்பு தொடரும் என்றாலும், இறுக்கமான சூழ்நிலையில் இருந்து மக்கள் வெளியே வரத் துவங்கிவிட்டனர். அதனால், பாதுகாப்பு படையினருக்கு வேலை குறைந்து போய் உள்ளது.

பைசாபாத் நகர எஸ்.பி., ரத்தோர் கூறுகையில், 'நிலைமை முற்றிலும் சகஜமாக உள்ளது. அமைதியான சூழ்நிலை நிலவியபோதிலும், தொடர்ந்து பாதுகாப்பு தொடரும்' என்றார்.

அயோத்தியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கோவிலுக்கு, நேற்று வழிபாடு நடத்த பக்தர்கள் குறைந்த அளவில் வந்திருந்தனர். அருகிலுள்ள கடைகளில் இந்து மத பஜன் பாடல்கள், 'சிடி' விற்பனை கடைகளில் ஒலித்துக் கொண்டிருந்தன. பதட்டம் நீங்கி அமைதியான சூழ்நிலை நிலவியது.

டில்லியில், அயோத்தி பரபரப்பு முடிந்து காமன்வெல்த் போட்டியில் மக்களின் கவனம் திரும்பியுள்ளது. இருப்பினும் நகரின் அனைத்து பகுதிகளிலும் பதட்டம் குறைந்து அமைதி நிலவுகிறது.

மும்மை லாத வ நிலவுகிற படி போ முன்னெ கைகள் ரமே அ பார்த்து துள்ளன அமை திலும், னும் சி என மும் ஷனர் துள்ளார் எஸ்.

அமைதி போன்க எஸ்.எம் தடை, னம் வ அறிவித்